STD: V(April)

# EVERWIN PUBLIC SCHOOL 2019-20

## NOL L2- தமிழ்

1. உயிர் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

   உயிர் எழுத்துகள் பன்னிரெண்டு அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

2. மெய் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

   மெய் எழுத்துகள் பதினெட்டு. அவை க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

3. எழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

   எழுத்துகள் இரண்டு வகைப்படும், அவை குறில், நெடில்

4. குறில் என்றால் என்ன? அவை யாவை?

   குறுகிய -ஓசையுடைய எழுத்துகள் குறில் எனப்படும். அ, இ, உ, எ, ஒ.

5. நெடில் என்றால் என்ன? அவை யாவை?

   நீண்ட ஓசையுடைய எழுத்துகள் நெடில் எனப்படும். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.

6. மெய் எழுத்துகள் எத்தனை வகைப்படும் அவை யாவை?

   மெய் எழுத்துகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம் அவை, வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகும்.

7. வல்லினம், மெல்லினம், இடையினம் எழுத்துகளை வகைப்படுத்துக.

   வல்லினம் (6) - க், ச், ட், த், ப், ற்

   மெல்லினம் (6) - ங், ஞ், ண், ந், ம், ன்

   இடையினம் (6) - ய், ர், ல், வ், ழ், ள்

### உயிர்மெய் எழுத்துகள்

1. உயிர்மெய் எழுத்து என்றால் என்ன?

   உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் சேர்ந்து உருவாகும் எழுத்து உயிர்மெய் எழுத்து எனப்படும். (எ. கா) க் + அ = க

   12× 18= 216

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

### சொல்

1. சொல் என்றால் என்ன? எடுத்துக் காட்டு தருக?

   ஓரெழுத்து தனித்தோ பல எழுத்துகள் சேர்ந்தோ பொருளை தருவது சொல் எனப்படும். (எ.கா) கை, மலர், தா, மான், தங்கம்.

2. இலக்கண அடிப்படையில் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

   இலக்கண அடிப்படையில் சொற்கள் நான்கு வகைப்படும். அவை (i)பெயர்ச்சொல் (ii) வினைச்சொல் (iii) இடைச் சொல் (iv) உரிச்சொல்

### திணை

1. திணை என்றால் என்ன?

   திணை என்றால் ஒழுக்கம் என்பது பொருள்.

2. திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

   திணை இரண்டு வகைப்படும். அவை (i) உயர்திணை (ii) அஃறிணை

## பால்

1. பால் என்பதன் பொருள் யாது?

பால் என்பதற்கு பகுப்பு அல்லது பிரிவு என்பது பொருள்.

2. பால் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பால் ஐந்து வகைப்படும். அவை 1. ஆண்பால் 2. பெண்பால் 3. பலர்பால்

4. ஒன்றன் பால் 5. பலவின்பால்

## எண்

1. எண் என்றால் என்ன?

எண்ணிக்கையைக் குறிப்பது எண் ஆகும்.

2. எண் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

எண் இருவகைப்படும் 1. ஒருமை 2. பன்மை

3. ஒருமை, பன்மை- விளக்குக?

ஒருமை: ஒன்றை மட்டும் குறிப்பது ஒருமை எனப்படும்.

எ.கா: மரம், மனிதன், குதிரை.

பன்மை: ஒன்றிற்கு மேற்பட்டவற்றை குறிப்பது பன்மை எனப்படும்.

எ.கா: மரங்கள், கதிர்கள், பறவைகள்.

I. 1. மயங்கொலி என்றால் என்ன? மயங்கொலி எழுத்துகள் யாவை?

விடை: உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகள் மயங்கொலிகள் ஆகும். (i)ண, ன, ந (ii)ல, ழ, ள (iii)ர, ற ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.

II. ர,ற வேறு பாடு அறிந்து சரியான சொற்களால் நிரப்புக:

2. வானில் பறப்பது பறவை (பறவை/ பரவை)

கடலின் மறுபெயர் பரவை

3. கடிதத்தை உறையில் போடு (உறை/உரை)

மாணவன் படித்தான் உரைநடை

4. வீட்டில் உள்ளது அறை (அறை/அரை)

ஒன்றில் பாதி அரை

III. ல ள ழ வேறுபாடு அறிந்து சரியான சொற்களால் நிரப்புக:

5. கிளியின் அலகு சிவப்பு நிறம் (அலகு/ அளகு)

6. யானை மிகுந்த பலம் உள்ள விலங்கு (பலம்/ பழம்)

7. பால் உடலுக்கு நல்லது (பால்/ பாள்)

IV. ண, ன, ந வேறுபாடு அறிந்து தகுந்த சொற்களால் நிரப்புக.

8. நான் உணவு உண்டேன் (உன்டேன்/ உண்டேன்)

9. ஓவியம் வரைந்தான் (வரைந்தாண்/ வரைந்தான்)

10. நண்டு வளையில் இருந்தது (னண்டு/நண்டு)